**OS.132/2024**

**நாள். 24.03.2026**

**வா.சா.1 – சத்தியராஜ்**

<u>4 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

வழக்குச் சொத்து இராமநாதபுரம் தாலுகா முனியன்வலசை கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். விஸ்தீரணம் 45 சென்டு என்றால் சரிதான். நான் பிராதில் வழக்கு சொத்துக்கு சொல்லியுள்ள நான்குமால்கள் சரியா என்றால் சரிதான். வழக்கு சொத்து மற்றும் அதன் மேற்கு மற்றும் வடக்குப்புறம் உள்ள சொத்துக்கள் ஆதியில் ஒரே சர்வே எண்ணில் 4 ஏக்கர் 60 சென்டு விஸ்தீரணமாக இருந்தது என்றால் சரிதான். அந்த சொத்து முத்து என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். முத்துவுக்கு இரண்டு மனைவி என்றால் சரிதான். முதல் மனைவிக்கு பிறந்த குழந்தை பொன்னம்மாள் என்றும் இரண்டாவது மனைவிக்கு பிறந்த குழந்தை மணிவாசகம் என்றால் சரிதான். பிராதுடன் நான் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் கண்ட விவரங்கள் உண்மையா என்றால் உண்மைதான். பொன்னம்மாளும், மணிவாசகமும் 4 ஏக்கர் 60 சென்டு சொத்தை பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். தென்புறமாக உள்ள 2 ஏக்கர் 30 சென்டு மணிவாசகத்திற்கும், வடபுறமாக உள்ள 2 ஏக்கர் 30 சென்டு பொன்னமாளுக்கும் கிடைத்தது என்றால் சரிதான். தென்புறமாக மணிவாசகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்திற்கு சர்வே எண்.119/6 பி என உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். வடக்கே பொன்னம்மாளுக்கு ஒதுக்கப்பட்ட சொத்திற்கு சர்வே எண்.119/6 ஏ என உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மணிவாசகம் தனக்கு பாகமாக கிடைத்த 2 ஏக்கர் 30 சென்டில் மேற்குப்புறத்தில் என்னுடைய வரைபடத்தில் KMNHIJK என குறிப்பிடப்பட்டுள்ள பகுதியை அதாவது 50 சென்டு நிலத்தை கோவிந்தம்மாளுக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். கோவிந்தம்மாள் தான் கிரையம் பெற்ற சொத்தை மதிமலர் என்பவருக்கு

கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். 50 சென்டு கிரையம் கொடுத்தது போக கிழக்கே உள்ள 1 ஏக்கர் 80 சென்டு மணிவாசகத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மதிமலர் தான் கிரையம் வாங்கிய 50 சென்டு நிலத்தில் 22 சென்டு நிலத்தை சண்முககனி என்பவருக்கும், 23 சென்டு நிலத்தை கண்ணன் என்பவருக்கும் கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். கண்ணன் பொன்னம்மாளின் பேரன் என்றால் சரிதான். பொன்னம்மாளின் மகன் கருப்பையா மணிவாசகத்தின் 1 ஏக்கர் 80 சென்டை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மதிமலர் சண்முககனி மற்றும் கண்ணனுக்கு கிரையம் கொடுக்கும்போது கிழக்கு நான்குமாலாக கருப்பையா நிலம் என காண்பித்துள்ளார் என்றால் சரிதான். சர்வே எண்.119/6 ஏ மற்றும் சர்வே எண்.119/6 பி பூமியில் தனித்தனியாக உள்ளது என்றால் சரிதான். பிராது வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள ABCDA பகுதி சொத்தானது மொத்தான சொத்தான 2 ஏக்கர் 30 சென்டு நிலத்தின் நடுப்பகுதியில் அமைந்துள்ளது என்றால் சரிதான். அந்த சொத்திற்கு மேற்கே 67 ½ சென்டும், கிழக்கே 123 சென்டும் உள்ளது என்றால் சரிதான். தாவா வழக்கு சொத்தான 45 சென்டை பொன்னம்மாள் 22.12.1988 தேதியில் முருகேசன் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். முருகேசன் பொன்னம்மாளின் மகள்வழிப் பேரன் என்றால் சரிதான். பொன்னம்மாளுக்கு சர்வே எண்.119/6 ஏ–யில் கண்ட சொத்துக்கள்தான் பாத்தியம் என்றால் சரிதான். அதனால் பொன்னம்மாள் சர்வே எண்.119/6 ஏ–யில் கண்ட சொத்தில்தான் முருகேசனுக்கு கிரையம் கொடுக்க முடியும் என்றால் சரிதான். பொன்னம்மாள் முருகேசனுக்கு எழுதிக்கொடுதத கிரைய பத்திரத்தில் சர்வே எண்.119/6 ஏ என குறிப்பிடுவதற்கு பதிலாக சர்வே எண்.119/6 பி என குறிப்பிட்டு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் பொன்னம்மாளின் பேரன் முருகேசனுக்கு சர்வே எண். 119/6 பில் எவ்வித உரிமையும் கிடையாது என்றால் சரிதான். சர்வே எண்.119/6 ஏ சொத்துக்கு வடக்கே சர்வே எண்.119/5 பி1, 119/5 ஏயில் கண்ட

சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்துக்கள் சுப்பிரமணியன் மற்றும் குரைசாபீவிக்கு பாத்தியம் என்றால் சரிதான். சர்வே எண்.119/6 ஏ சொத்துக்கு தெற்குப்புறம் கருப்பையா நிலம் உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்து சர்வே எண்.119/6 பி–ல் உள்ளது என்றால் சரிதான். கருப்பையாவின் மகன்தான் கண்ணன் என்றால் சரிதான். தாவா வழக்கு சொத்தான 45 சென்டு சர்வே எண்.119/6 பி–ல் எந்த பகுதியிலும் இல்லை என்றால் சரிதான். பொன்னம்மாளின் மகன்வழிபேரன் முருகேசன் என் மாமா. பொன்னம்மாளின் பேத்தி செல்வி என்றால் சரிதான். செல்வியின் மகன்தான் நான் என்றால் சரிதான். நான் தாவா சொத்தை 14.08.2023 தேதியில் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய சொத்துக்கு தெற்குபுறம் சர்வே எண்.119/6 பில் கண்ட சொத்து உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.119/6 பில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய சொத்து சர்வே எண்.119/6 ஏ–ல் உள்ள சொத்து என்றால் சரிதான். நான் கிரையம் பெற்றபோது கிரைய ஆவணத்தில் வடக்குபுறம் சுப்ரமணியன், குரைசாபீவி சொத்துகள் நான்குமாலாகவும், தெற்குப்புறம் சர்வேஎண்.119/6 பி எனவும், மேற்குபுறம் 67 ½ சென்டு எனவும், கிழக்குபுறம் 123 சென்டு எனவும் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய இடத்திற்கு மேற்குப்புறம் உள்ள 67 ½ சென்டு நிலத்தை காளிமுத்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். என்னுடைய கிரைய ஆவணத்தில் காளிமுத்து நிலத்தை மேற்கு நான்குமாலாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். காளிமுத்து சொத்துக்கு வடக்கே சுப்ரமணி கிரையம் வாங்கிய சர்வேஎண்.119/5 ஏ சொத்தும், சுப்ரமணி சொத்துக்கு கிழக்கே குரைசாபீவி கிரையம் வாங்கிய சர்வே எண்.119/5 பி1 ல் கண்ட சொத்தும் உள்ளது என்றால் சரிதான். நான் கிரையம் வாங்குவதற்கு முன்பு அளந்துதான் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய சொத்திற்கு சர்வே எண்.119/6 பி என குறிப்பிட்டிருந்தால் அது தவறு என்றால் சரிதான். அதனால் நான் கிரையம்

பெற்ற கிரைய ஆவணத்தின் அடிப்படையில் சர்வே எண்.119/6 பி–ல் எந்த உரிமையும் கோரவில்லை என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய சொத்து சர்வே எண்.119/6 ஏயில் உள்ளது என்றும், அந்த சொத்தில்தான் எனக்கு உரிமை உள்ளது என்றால் சரிதான், எனவே 4ம் பிரதிவாதியை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரிதான்.

**5, 6ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

4ம் பிரதிவாதி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்ளவதாக தெரிவித்து தனியாக குறுக்கு விசாரணை இல்லை என நீதிமன்ற காப்பாளர் தெரிவித்ததின்பேரில் குறுக்கு விசாரணை இல்லை.

Sd/–சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.